www.padippakam.com

# சுயநிர்ணயம் பற்றி

## இமயவரம்பன்

புதியபூமி வெளியீட்டகம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சுயநிர்ணயம் பற்றி

இமயவரம்பன்

புதியபூமி வெளியீட்டகம்

படிப்பகம்

www.padippakam.com

சுயநிர்ணயம் பற்றி

முதற்பதிப்பு : மே 2001

ஆசிரியர் : இமயவரம்பன்

வெளியிடுவோர் : புதியபூமி வெளியீட்டகம்
S 47 , மூன்றாம் மாடி,
மத்தியசந்தைத் தொகுதி, கொழும்பு 11

அச்சிட்டோர் : ரெக்னோ பிறின்ற்றர்ஸ்

விலை : ரூபா 30.00

ISBN 955-8568-00-7

**Suya Nirnayam Pattri** ***(On Self Determination)***

First Published : May 2001

Author : Imayavaramban

Publisher : Puthiya Poomi Publishers
S 47, 3rd Floor,
Colombo Central Super Market Complex,
Colombo 11.

Printer : Techno Printers
7/15 A, Pinthaliya Rd,
Mt. Lavania.

Price : Rs. 30.00

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

உலகின் பல்வேறு நாடுகளில் இடம் பெற்றுவரும் பெரும்பாலான போராட்டங்களில் பிரதான கோரிக்கையாக முன் நிறுத்தப்பட்டு வருவது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையாகும். மூன்றாம் உலக நாடுகள் எனச் சுட்டப்படும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் மட்டுமன்றி வட அமெரிக்க மேற்குலக நாடுகளிலும் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டு போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

பிரித்தானிய ஆட்சிக்கு உட்பட்ட அயர்லாந்திலும், கனடாவின் குவெபெக் மாகாணத்திலும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் தொடர்கின்றன. மத்திய ஆசியாவில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு உள்ளான பாலஸ்தீனத்திலும், துருக்கியின் பிடிக்குள் அகப்பட்டுள்ள குஸ்திஸ்தானிலும் சுயநிர்ணய உரிமைக்குரல் ஓங்கி ஒலித்துப் போராட்டமாகி நிற்கின்றது. அவ்வாறே சோஷலிச வீழ்ச்சிக்குப் பின்னான ரஷியாவிலும் சுயநிர்ணய உரிமை வேண்டிய போராட்டம் தொடர்கிறது.

இந்தியாவின் காஷ்மீரிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை போராட்டங்களின் ஊடாக எழுந்து நிற்கின்றது. இலங்கையில் அக் கோரிக்கையானது போராட்டங்கள் மூலமாக வளர்ச்சி பெற்று, மோசமடைந்துள்ள உள்நாட்டு யுத்தமாகிக் காணப்படுகின்றது. ஏனைய தென்னாசிய நாடுகளிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பல போராட்டங்கள் அதனை மையப்படுத்தி வளர்ந்து செல்வதைக் காண முடிகின்றது.

கடந்து சென்ற நூற்றாண்டின் இறுதி மூன்று நான்கு தசாப்தங்களில் இச் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள், தமது நியாயப்பாட்டை வலியுறுத்தி, அடக்கப்படும் தேசிய இனங்களின் ஆதரவோடு ஆயுதப் போராட்டங்களாக வளர்ச்சி பெற்று வந்துள்ளன. தேசிய இனங்களின் அடிப்படை அபிலாட்சைகளைப் பிரதிபலித்து நிற்கும் இப் போராட்டங்கள்

படிப்பகம்

பரந்துபட்ட மக்களின் ஆதரவோடு முன் செல்வதைக் காண முடிகின்றது. தேசிய இனங்களின் இருப்பையும் அவற்றின் இயல்பான வளர்ச்சியையும் நீதியான கோரிக்கையாக உள்ளடக்கி நிற்கும் மேற்படி போராட்டங்கள் தோற்கடிக்கப்பட முடியாதவைகளாகவே இருந்தும் வருகின்றன.

கடந்த நூற்றாண்டின் ஆரம்பம் தொட்டே உலகின் காலனியாதிக்க ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கான போராட்டங்கள் முனைப்படைய ஆரம்பித்தன. இத்தகைய போராட்டங்களுக்கு ரஷியாவில் இடம் பெற்ற ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியானது மாபெரும் உந்துதலையும் வழிகாட்டுதலையும் வழங்கியது. காலனித்துவ ஏகாதிபத்தியப் பிடிகளில் இருந்து விடுபட்டு அடக்கப்படும் தேசங்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொள்ள முன் வந்தன. இக் காலகட்டத்தில் தோழர் லெனின் சுயநிர்ணய உரிமை என்பதன் தர்க்க அடிப்படையை விளக்கி கோட்பாட்டு ரீதியாக விரிவுபடுத்தி முன் வைத்தார். தேசங்கள் பிரிந்து சென்று தமக்குரிய சொந்த ஆட்சி அதிகாரத்தை நிறுவிக் கொள்ளும் உரிமையை சுயநிர்ணய உரிமையின் உயர்ந்த கட்டமாகக் கண்ட லெனின் அவர்கள் தேசிய இனங்களின் விடுதலையையும் வற்புறுத்திக் கொண்டார். அதன் அடிப்படையிலேயே லெனின் விவாகரத்து உரிமையைப் பிரயோகிக்கும் உதாரணத்தை எடுத்துக் காட்டினார். அதேவேளை சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்தின் வர்க்க அடிப்படையை வலியுறுத்தவும் அவர் தவறவில்லை. அத்துடன் பெரும் தேசியவாத அகங்காரத்தை நிராகரித்து எதிர்த்த அதே நேரத்தில் குறுந்தேசியவாதத்தின் பிற்போக்கான அம்சங்களை மறுதலிக்கவும் செய்தார் என்பதும் கனத்திற்குரியதாகும்.

தோழர் லெனினின் காலச் சூழலுக்குப் பின் இச் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடானது வரலாற்று வளர்ச்சியின் ஊடாகப் புதிய தளங்களைச் சென்றடைந்து கொண்டதைக் காணுதல் வேண்டும்.

காலனித்துவத்திடமிருந்து அரசியல் சுதந்திரம் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படும் மூன்றாம் உலக நாடுகளில் ஆட்சி அதிகாரங்களைப் பெற்றுக் கொண்ட உயர் வர்க்கங்கள் பெரும் தேசியவாத அகங்காரப் போக்கிலேயே ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொண்டன. இலங்கையில் தரகு முதலாளித்துவ, தேசிய முதலாளித்துவ வர்க்க சக்திகள், மேட்டுக்குடி ஆட்சி அதிகாரத் தொடர்ச்சி மூலம் நாட்டின் பல்லின சமூகத் தன்மையை நிராகரித்துக் கொண்டன. நாட்டின் ஏனைய தேசிய இனங்களைச் சிறுபான்மையினர் என்னும் முத்திரையுடன் நிராகரித்து ஓரங் கட்டிக் கொண்டன.

இவ்வாறு இன, மொழி, பிரதேச, பண்பாட்டு அடிப்படையில் தேசிய வாழ்விலிருந்து அந்நியப்படுத்தப்பட்ட தேசிய இனங்கள் விரைவாகவே விரக்தியும் வெறுப்பும் அடைந்து கொண்டன. தாங்கள் முன் வைத்த ஜனநாயகக் கோரிக்கைகள் யாவும் புறந்தள்ளப்பட்டு அடக்குமுறைகளை எதிர்கொண்ட சூழலில் அகிம்சை நிலையில் இருந்து விடுபட்டு ஆயுதப் போராட்டம் என்னும் நிலைக்குச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டன. இப் போராட்டங்களின் மைய வலியுறுத்தல் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை-யாக அமைந்து கொண்டது.

இத்தகைய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையானது இன்றுவரை வாதப் பிரதிவாதங்களைக் கொண்டதாகவே இருந்து வருகின்றது. நமது நாட்டின் மூன்று தசாப்தகால அனுபவத்தைக் காணுகின்ற போது சுயநிர்ணய உரிமை என்பதனைப் பிரிவினை மட்டுமே என்னும் குறுகிய சட்டத்தின் ஊடாகப் பார்க்கும் போக்கு இன்றும் இருந்து வருகின்றது. இது தமிழர்கள் மத்தியில் உள்ள ஒரு சாராரிடமும் சிங்கள மக்கள் மத்தியில் பெரும்பாலாரிடமும் காணப்படுகின்றது. பேரினவாதிகள் என்போருக்கும் அப்பால் புத்திஜீவிகள், இடதுசாரிகள் என்போரிடமும் அத்தகைய எண்ணக்கருவே இருந்து வருகின்றது.

ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சிக்கான சூழலில் பிரிந்து செல்வதற்கான உரிமை தேசிய இனங்களுக்கு வழங்கப்பட்டமையும் ஆனால் நடைமுறை அனுபவங்களின் வாயிலாக இணைந்து வாழும் பாட்டாளி வர்க்கக் கோரிக்கை வற்புறுத்தப்பட்டமையும் கவனத்திற்குரியவைகளாகும். சுயநிர்ணய உரிமையைத் தேசிய இனங்களின் உண்மையான சமத்துவத்தை நிலை நிறுத்தும் பரந்த சுயாட்சி மூலம் செயற்படுத்த முடியும் என்பதனை சீனப் புரட்சியிலும் அதன் பின்னான சீன சமூக அமைப்பிலும் காண முடிந்தது. இந் நடைமுறை மூலம் சீனாவில் மட்டுமன்றி நிக்கராஹுவா நாட்டின் நடைமுறை-யிலும் சுய நிர்ணய உரிமையின் பிரயோகத்தைக் காண முடிந்தது.

எனவே சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் வளர்ச்சியை, கடந்து சென்ற நூற்றாண்டின் போராட்டங்கள், சமூக மாற்றங்கள் போன்ற செழுமையான அனுபவங்களோடும் இணைத்துப் பார்ப்பது அவசியமாகிறது. அவ்வாறான படிப்பும் பரிசீலனையும் நமக்கு தேவையாகியுள்ளது.

அந்த வகையில் நமது புதிய ஜனநாயகக் கட்சி இலங்கையில் சுயநிர்ணய உரிமைப் பிரயோகம் பற்றிய விரிவான படிப்பிலும் பரிசீலனையிலும் ஈடுபட்டு வந்துள்ளது. இங்கு இரண்டு விடயங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகும். ஒன்று சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு பற்றிய

வளர்ச்சியை சர்வதேச அனுபவங்களின் அடிப்படையிலும் ஏகாதிபத்தியம் உருவாக்கியுள்ள பூகோளமயமாதல் என்னும் புதிய சூழலிலும் கண்டு கொள்வது. இரண்டாவது, நமது நாட்டின் விசேட சூழலுக்கும் யுத்தமாக்கப்பட்டுள்ள தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கும் ஏற்றவாறு பிரயோகித்துக் கொள்வது.

மேற்கூறிய இரண்டு அடிப்படைகளையும் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தின் ஊடாகவே நாம் வரையறை செய்து கொள்ளுதல் வேண்டும். அந்த வரையறைகளின் வளர்ச்சியை 1984ம், 1991ம், 1997ம் ஆண்டுகளில் இடம் பெற்ற முதலாம், இரண்டாம், மூன்றாம் தேசிய மாநாடுகளில் கட்சி தெளிவுபடுத்திக் காட்டியது. இதனை கட்சியின் தேசிய மாநாடுகளின் அறிக்கைகளிலும் வெளியீடுகளிலும் காண இயலும். குறிப்பாக புதியபூமி, New Democracy ஆகிய கட்சியின் பத்திரிகைகளில் அவ்வப்போது சுயநிர்ணய உரிமை பற்றிய கட்டுரைகள் வெளி வந்துள்ளன. அவற்றுள் சில ஏற்கனவே நூல் வடிவிலும் கொண்டு வரப்பட்டுள்ளன.

அத்தகைய நூல் வெளியீட்டு வரிசையில் இமயவரம்பன் எழுதியுள்ள இந் நூல் வெளி வருகின்றது. சுயநிர்ணய உரிமை பற்றிய கலந்துரையாடல் மூலமான படிப்பிற்கும் பரிசீலனைக்கும் இதில் அடங்கியுள்ள கட்டுரைகள் மிகவும் பயன் உள்ளவையாகும். தேசிய இனப்பிரச்சினை கொடூர யுத்தமாகி நிற்கும் இன்றைய சூழலில் சுயநிர்ணய உரிமை பற்றிய தெளிவு அவசியமானதாகும். அதற்கு இமயவரம்பனின் இக்கட்டுரைகள் பயன் உள்ள பங்களிப்பை வழங்கும் என்பது உறுதி. அத்துடன் சுயநிர்ணய உரிமை பற்றிய முன்னைய கட்டுரைகளின் தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் இக் கட்டுரைகளில் காண முடியும்.

சி. கா. செந்திவேல்
பொதுச்செயலாளர்,
புதிய ஜனநாயகக் கட்சி

கொழும்பு
20.03.2001

www.padippakam.com

# நமது அறமும் அவர்களது அறமும்

**(மாக்ஸியவாதியின் நியாயமும் தேசியவாதியின் நியாயமும்)**

தேசியமே அடிப்படையானது என்ற வாதம் இப்போது பெரிதும் அடங்கி விட்டது. தேசியவாதத்திற்கு அதன் வரலாற்று அடிப்படையில் ஒரு தத்துவார்த்த நியாயம் வழங்க முயற்சி எடுத்தவர்களால் தமது வாதங்களின் அபத்தமான முடிவுகளினின்று மீள முடியவில்லை. தேசியவாதத்தின் தத்துவ நியாயமும் சித்தாந்த விளக்கங்களும் தோற்ற காரணத்தால் அது அழிந்து விடவில்லை. ஏனெனில் தேசிய இன ஒடுக்கல் உள்ள இடத்தில் தேசிய வாதத்திற்கான ஊட்டம் இருக்கிறது. தேசிய இன ஒடுக்கலுக்கோ வேறு எந்தத் தேசிய இனப் பிரச்சினைக்கோ தேசியவாதத்தின் அடிப்படையில் எவரும் தீர்வு தேடும் போது, தீர்க்க முற்பட்ட பிரச்சினையை விட மோசமான பிரச்சினைகட்கு வழி ஏற்படும் ஆபத்து அதிகம். அந்த ஆபத்து தேசிய-வாதத்திற்கு உள்ளேயே பொதிந்துள்ள ஒன்றாகும்.

தேசியவாதம் முற்போக்கான ஒன்றாக உள்ள சூழ்நிலைகளில் கூட, சிலசமயம் மக்கள் மத்தியிலான சினேக முரண்பாடுகளில் பகைமையான பண்புகளைப் புகுத்தி விடுகிறது. அதனுடைய நியாயம், தேசிய இனங்களுக்கு உள்ளேனுங் கூட மனித சமத்துவ நோக்கில் பொய்த்து விடுகிறது. மாக்ஸிய நியாயம் அதன் நடைமுறைப் படுத்தலில் ஏற்படக் கூடிய தவறுகளையும் அணுகுமுறையில் இருக்கக்கூடிய குறைபாடுகளையும் மீறி ஒரு அடிப்படை-யான மனித சமத்துவ நெறியின் மீதே அமைய முடிகிறது. மாக்ஸியத்தின் பேரால் குறுகிய தேசியவாத நிலைப்பாடுகளை மேற்கொள்வோரின் வர்க்க நிலைப்பாடு பாட்டாளிவர்க்க விரோதமாகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பாதகமாயும் அமைவதை நாம் காணலாம். தேசிய இனப்பிரச்சினையில் மட்டு-மன்றி, சமுதாயத்தின் எந்த முரண்பாடும் மனிதர் மீது மனிதர் தொடுக்கும் ஒடுக்குமுறையாக அமைகிற ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஒருவரது மாக்ஸிய அணுகுமுறையை நாம் பரீட்சைக்கு உட்படுத்தலாம். பல வேறுபட்ட

தீர்வுகட்கும் தீர்மானங்கட்கும் மத்தியிலும் நேர்மையான மாக்ஸிய அணுகுமுறை உடையோர் மத்தியில் அடிப்படையான ஒற்றுமைகளை நாம் காணமுடியும். தேசியவாதத்தால் தேசிய முரண்பாடு தவிர்ந்த பிரச்சினைகளில் எந்த வித உடன்பாட்டையும் தேட இயலாது போவது விளங்கக்கூடியது. அதைவிடத், தேசியவாதம் தனக்குள் ஏற்படுத்திக் கொள்கிற அடையாளச் சிக்கல்கள் பாரியன.

சகல சமூக அரசியற் சிந்தனைப் போக்குக்களும் மனிதரது சமூக அடையாளம் சார்ந்தே விருத்தி பெறுகின்றன. சமூகத்தில் மனிதருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அடையாளங்கள் உள்ளன. இந்த அடையாள வேறுபாடுகள் மனிதரிடையிலான முரண்பாடுகட்குக் காரணமாகின்றன. பால் வேறுபாடு தவிர்ந்த பிற அனைத்தும் காலத்தால் மாறுபடுகின்ற அடையாள வேறுபாடுகளே. அவற்றை நாம் வரலாற்றில் வைத்தே நோக்க வேண்டி உள்ளது.

சில அடையாளங்கட்கு நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சி உண்டு. நிறம், இனம் போன்றவை இவற்றுக்கு முக்கிய உதாரணங்கள். ஆயினும் நிறக்கலப்பும் இனக்கலப்பும் வரலாற்றில் தொடர்ந்தும் இருந்தே வந்துள்ளன. மொழி, பண்பாடு, வாழுகின்ற பிரதேசம், மதம் போன்றவை மனிதர்களை ஒரு சமூகப் பிரிவாக அடையாளங் காணவும் சேர்ந்து இயங்கவும் செய்வன. ஆயினும், இவை கூடத், தனி மனித அளவிலும் சமுதாயக் குழுக்கள் என்ற அளவிலும் மாற்றத்திற்கு உட்பட்டு வந்தவையே. மனித சமுதாயங்களின் வளர்ச்சியின் போக்கில் உழைப்பின் பிரிப்பும் அதனை ஒட்டி ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளும் மனிதரை மனிதர் சுரண்டி வாழ்வதை ஒரு சமூக நிறுவனமாக்கும் வர்க்க சமுதாயத்தை இயலுமாக்கின. மனித அடையாளங்கள், மனித சமுதாயங்கள் யாவுமே வர்க்க அடிப்படையிலானவை. அந்த வகையில், உலக வரலாறு வர்க்க முரண்பாடுகளது வரலாறாகவும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகவுமே இருந்து வந்துள்ளது.

மனிதர் பிற மனிதருடன் பூணும் உறவுகளில் அவர்களது அடையாளம் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. மனித அடையாளங்கள் மனித உறவுகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பது ஒவ்வொரு அடையாள வேறுபாட்டுக்கும் நாம் வழங்கும் முக்கியத்துவத்தைப் பொறுத்தது. மனிதரிடையிலான அடையாள வேறுபாடு அடிப்படையில் ஒரு சினேக முரண்பாடே. இதற்கு வரலாற்றில் நிறைய ஆதாரங்கள் உள்ளன. ஆட்சி அதிகாரம் இந்த முரண்பாடுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் போது, இம் முரண்பாடுகளுள் பகைமையான பண்புகள் புகுத்தப்பட்டு வளர்த்தெடுக்கப்படுகின்றன. நிறவெறி, இனவாதம், பிரதேசவாதம், மொழிவெறி, மதவெறி,

தேசியம், சாதியம், வருணாசிரமம் போன்ற யாவும், ஒவ்வொரு வரலாற்றுச் சூழலில் ஒரு சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகிற ஒரு சிறுபான்மைப் பிரிவு தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்தவும் விஸ்தரிக்கவும் எடுக்கிற நடவடிக்கைகளை நியாயப்படுத்துகிற சித்தாந்தங்களே.

வரலாற்றில் மனிதர்களது அடையாளம் தொடர்ந்து மாறுகிறது. இனக்கலப்பு, மொழிக்கலப்பு, மதமாற்றம், மதங்களில் ஏற்படும் மாற்றங்கள், நாடுகட்கும் பிரதேசங்கட்கும் இடையில் பலவேறு தளங்களில் நிகழும் உறவாடல்கள், போர், ஆக்கிரமிப்பு, புலப்பெயர்வு, குடிவரவும் குடியகல்வும், கருத்துப் பரிமாறல்கள், தொடர்பு ஊடகங்களது விரிவாக்கம் போன்று பல விதமான செயற்பாடுகள் மனிதச் சமூகங்கள் தமக்கென வழங்கும் அடையாளங்களை மாற்றுகின்றன. அதேவேளை, இன அழிப்புப் போன்றவற்றையும் வரலாறு கண்டிருக்கிறது. இங்கே அடையாளம் பற்றியும் பொது அடையாளத்திற்கு உட்படாத இரு சமுதாயங்களிடையிலான உறவு பற்றியும் தேசியவாதப் பார்வையும் மாக்ஸியப் பார்வையும் தெளிவாகவே வேறுபடுவதை நாம் காணலாம். இப் பார்வை வேறுபாடே மாக்ஸிய அறத்தையும் தேசிய அறத்தையும் வேறுபடுத்தி நிற்கிறது.

தேசிய நியாயம் தேசிய இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்டம் என்ற எல்லையைத் தாண்டும் போதே தேசிய மேலாதிக்கம் என்ற படிக்கட்டிற் காலை வைத்து விடுகிறது. ஐரோப்பிய வெள்ளை இனவாதமும் கிறிஸ்துவ மதவாதமும் ஐரோப்பிய தேசியவாதங்களும் யூத இன மக்களுக்கு எதிராக நடத்திய கொடுஞ்செயல்களின் வரலாறு பல நூற்றாண்டுக்கால விரிவை உடையது. அது ஜேர்மன் பாஸிஸமான நாற்ஸியமெனும் வடிவில் யூதர்களை ஒடுக்கிய போது ஐரோப்பியத் தேசியவாதங்கள் முதலில் அதைக் கண்டு கொள்ளவில்லை. ஏகாதிபத்திய நலன்கட்காக உலக வல்லரசுகள் இஸ்ரேலை உருவாக்கிய பின்பு, விடுதலைக்காகப் போராடிய யூத தேசியம் ஆக்கிரமிப்பாளனாகவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களை மத்திய கிழக்கிற் காத்து நிற்கும் காவலனாகவும் மாறி விட்டது. அரபு தேசியவாதங்களாகத் தம்மைக் காட்டிக் கொள்கிற பலவேறு அரபு ஆட்சிகள் பலஸ்தீன மக்களது விடுதலைக்காகச் செய்ததை விடத் தேசியத்தின் பேராலும் தமது நாடுகளில் தமது ஆட்சியை உறுதிப்படுத்தவும் தம் செல்வத்தைப் பெருக்கவும் செய்த காரியங்களே முதன்மையானவை.

பல வேறு இனங்களைக் கொண்ட நாடுகளில் தேசிய அடையாளம் என்பது சிக்கலானது. சில சமயங்களில் ஒரே இனத்து மக்கள் கூட, மதம், பிரதேச வேறுபாடு போன்ற அடிப்படைகளில் தமது தனித்துவத்தை வலியுறுத்துகின்றனர். மறுபுறம், உதாரணமாக கியூபாவில், கறுப்பு இனத்தவரும் வெள்ளை

ஸ்பானிய வம்சாவழியினரும் கலப்பு இனத்தவரும் தம்மை ஒரு தேசத்தவர்களாகவே கருதுவதைக் காணலாம். மேற்கிந்திய தீவுகளில் குடியேறிய இந்திய வம்சாவழியினர் இந்திய அடையாளத்தை எப்போதோ நிராகரித்து விட்டனர். அவர்களது இந்திய அடையாளம் சில சமயங்களில் குறுகிய அரசியல் வாபம் கருதி, கயானாவில் போன்று, பிரித்தானிய, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால் அவர்கட்கு எதிராகப் பாவிக்கப்பட்டும் உள்ளது.

நாம் கவனிக்க வேண்டியன என்னவென்றால் தேசியவாதத்தில் இயற்கையானது எனவோ நிரந்தரமானது எனவோ எதுவும் இல்லை என்பதும் தேசியவாதம் என்பது குறிப்பிட்ட ஒரு காலச்சூழலில் ஒரு சமுதாயத்தின் சமூக அரசியற் பிரச்சினைகளின் விளைவாக் கட்டியெழுப்பப்படும் ஒன்று என்பதுமே.

இந்தியத் தேசியவாதமும் தமிழ்த் தேசியவாதமும் இந்துத்துவமும் இன்று தமிழகத்திற் தலை தூக்கி வரும் சாதி அடையாளங்களும் ஒப்பிடத் தக்களவு அபத்தமானவை தாம். இந்த அடையாளங்களில் ஒவ்வொன்றுமே குறுகியகால நோக்குடன் வசதி படைத்த ஒரு சிறு சமூகப் பிரிவினரது நலன்கட்காகவே வளர்க்கப்படுகின்றது. இதனால் இவை குறிக்கும் மனித அடையாளங்கள் அபத்தமானவையாகி விடமாட்டா. அவை மதிக்கப்பட வேண்டும். இந்த மதிப்பை எல்லா மனிதர்கட்குமிடையிலான சமத்துவமாக எண்ணி அவற்றைப் பேணும் உரிமையை ஏற்பது மாக்ஸிய அணுகுமுறை, ஒரு குறிப்பிட்ட அடையாளத்தை மட்டுமே முதன்மைப்படுத்தி அதன் நலன்கட்கு மற்றவற்றின் நலன்களைக் கீழ்மைப்படுத்துவது தேசியவாத அணுகுதுறை.

இலங்கையில், இன்றுங் கூடச், சிங்கள மக்களை இழிவு செய்யும் முறையிற் தமிழ்த் தேசியவாதிகள் பேசுவதை நாம் கேட்கலாம். சிங்களப் பேரினவாதிகள் தமிழரை இழிவு செய்வதும் தமிழ், முஸ்லிம் இனத்தவர்கட்கு எதிராகத் தொடுத்து வருகிற தாக்குதல்களும் எந்த வகையிலும் சிங்கள மக்களை நிந்திப்பதை நியாயப் படுத்த மாட்டா என்பது மாக்ஸிய நிலைப்பாடு. ஒரு மாக்ஸியவாதி சீரழியும் போதே குறுகிய தேசியவாதம் அவரது சிந்தனையை ஆக்கிரமிக்க முடிகிறது. லங்கா சமசமாஜக் கட்சியும் திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சியும் 1960களின் பின் வெகுசனப் புரட்சியை நிராகரித்ததோடு இந்தச் சறுக்குப்பாதையில் கால் வைத்ததை நாம் கண்டோம். நேர்மையான ஒவ்வொரு மாக்ஸியரும் அதைக் கண்டிக்கத் தவறவில்லை எனவும் நாம் கண்டோம். அதைக் கண்டிப்பதற்கு ஒரு மாக்ஸியர் தமிழராகவோ முஸ்லிமாகவோ இருக்க அவசியமாகவில்லை. இவ்வாறே வடக்கு கிழக்கில் விடுதலையின் போரால் முஸ்லிம்களும் சிங்களவரும் இம்சிக்கப்படும் போது ஒரு மாக்ஸியவாதி தனது தேசிய இன அடையாளம் பற்றிய கவலை இல்லாது அதைக் கண்டிக்க முடிகிறது.

முன் கூறியது போல, தேசிய இனப்பிரச்சினையில் மாக்ஸிய நியாயமும் தேசிய நியாயமும் வேறுபடுவதற்கான அடிப்படை எளிமையாக விளங்கிக் கொள்ளக் கூடியது. முதலாவது நியாயம் எந்தத் தேசிய இனமும் ஒடுக்கப்படுவதை எதிர்க்கிறது. இரண்டாவது நியாயம், ஒரு குறிப்பிட்ட இனம் ஒடுக்கப்படுவதை எதிர்த்து, அந்த இனம் பிற இனங்களை ஒடுக்குவதை ஏற்கிறது.

சிங்களப் பிரதேசங்களிலோ வட இந்தியாவிலோ பிற இந்திய மாநிலங்களிலோ உலகின் வேறு மூலைகளிலோ பிழைப்புக்காகச் சென்ற தமிழர்கள் தமது மொழி அடையாளத்தை இழப்பது பற்றிச் சினக்கிற தமிழ்த் தேசியவாதம், தமிழ்நாடு உட்படத் தமிழர் பெருவாரியாக வாழுகிற பகுதிகளுள் வந்து குடியேறிய தெலுங்கர், மராத்தியர் போன்றோர் தமது மொழியை மறந்தே ஆக வேண்டும் என்று வற்புறுத்துவதை நாம் காணலாம். அது மட்டுமன்றிப் பிற மாநிலங்களிலிருந்து வந்தோர் தமிழைத் தமது அன்றாட வாழ்விற் பெரிதும் பயன்படுத்தும் போதும் அம் மக்களை, வசதியான போது, அவர்களது பழைய இன அடையாளத்தைக் காட்டி ஒடுக்க முனைவதையும் நாம் காணலாம். மாக்ஸிய நியாயமோ, மாறாக, ஒவ்வொரு தனி மனிதருக்கும் சமூகப் பிரிவுக்கும் தனது அடையாளத்தைப் பேணும் உரிமையை ஏற்பதோடு அதற்கு வசதி செய்வதையும் சரியானதாகக் கொள்ள இடமளிக்கிறது.

இவ்விடத்து, மூர்க்கத்தனமான வரட்டு மாக்ஸியம் பற்றியும் சந்தர்ப்பவாதம் பற்றியும் சிறிது எச்சரிக்க வேண்டும். இவர்களில் ஒரு சாரார், சோஷலிசம் வந்த பிறகு எல்லாமே சரியாகி விடும், எனவே வர்க்கப் போராட்டத்தை விட வேறெதுவுமே முக்கியமானதல்ல என்று தேசிய விடுதலை உட்படப் பல வேறு சமூக முரண்பாடுகளை அப்படியே புறக்கணிக்கிறதை நாம் காணலாம். வரட்டு மாக்ஸியம் மலத்தை விட இழிவானது என மாஓ சேதுங் சொன்னதை நாம் இங்கு நினைவு கூரலாம். வரட்டு மாக்ஸியம் மாக்ஸியமல்ல, அது வாழுகிற மாக்ஸியத்தால் கழித்து விடப்பட்ட வரலாற்று எச்சம். மறுபுறம் தமது வசதிக்காக எசமான வர்க்கங்களுடனும் ஏகாதிபத்தியத்துடனும் சமரசம் செய்வதற்காக ஒடுக்கப்பட்ட மக்களைக் காட்டிக் கொடுக்கிற சந்தர்ப்பவாதப் போக்கு உள்ளது. இதனுடைய மரபு, உண்மையில், சமூக ஏகாதிபத்தியம் என லெனின் வருணித்த சோஷலிஸ ஜனநாயகவாதத்தின் மரபு தான். மக்களைக் கவருவதற்காக மாக்ஸிய வேடம் தாங்கி உலாவுகிற இவர்கள் தேசிய இன ஒடுக்கல் என்ற பரீட்சை வரும் போது தமது தேசியவாத, சந்தர்ப்பவாத முகங்களை வெளிக்காட்டி விடுகிறார்கள்.

மனித சமத்துவம், சோஷலிசம், பெண்ணியம், சுற்றாடல், நவகொலனித்துவம், பன்னாட்டு நிறுவனங்கள், சாதியம், சிறுபான்மை மத உரிமையும் மொழி உரிமையும் என்றவாறான ஒவ்வொரு பிரச்சினையிலும் தேசிய-

வாதத்தால் ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுக்க இயலாது போகிறது. எங்காவது அது ஒரு சரியான தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்றால், அது, இடதுசாரிச் சிந்தனையால் வழிநடத்தப்பட்ட தேசிய விடுதலைப் போராட்டம் ஒன்றன் பின்னணியில் நிகழ்ந்திருக்கக் காணலாம்.

மாக்ஸியர்கள் எப்போதுமே சரியாகத்தான் நடந்துள்ளனர் என்பது எனது வாதமல்ல. உண்மையாக மாக்ஸியத்திற்குத் தேசியம் பற்றிய ஒரு விறைப்பான, நிரந்தரமான நிலைப்பாடு இருக்க அவசியமில்லை. அது தேசிய இனப்பிரச்சினையை அதைவிட அடிப்படையான வர்க்க சமூகக் கண்ணோட்டத்தில் வைத்தே நோக்குகிறது. குறிப்பிட்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை வெறுமனே ஒரு தேசிய இனத்தினதோ இன்னொரு தேசிய இனத்தினதோ நோக்கில் அணுகாமல் உலக நிலவரம், உள்நாட்டு நிலவரம், பிராந்திய நிலவரம் போன்ற பல வேறு தளங்களிலும் அதை நோக்கும் தேவை அதற்கு உள்ளது. இதனாற் சில இடங்களில் தவறான நிலைப்பாடுகள் ஏற்பட இடமுண்டு. ஆயினும் இவை திருத்திக் கொள்ள முடியுமானவை.

சுயநிர்ணயம், தேசம், தேசிய இன விடுதலை என்பனவற்றை வெறும் வாய்ப்பாடுகளாக எவரும் சுருக்கிக் கொள்ள இயலாது. அது மாக்ஸியமும் அல்ல. அவை தம் பல்வேறு பரிமாணங்களிலும் பார்வைக்கு உள்ளாக வேண்டும். முரண்பாட்டுக்கு உட்பட்ட மக்கள் மத்தியிலான சினேக முரண்பாட்டுப் பரிமாணமும் ஒடுக்கு முறையாளனான எதிரிக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்குமிடையிலான பகை முரண்பாட்டுப் பரிமாணமும் சீர் தூக்கிப் பார்க்கப்பட வேண்டும். இதன் காரணமாகவே தேசிய இனப்பிரச்சினைகட்குப் போர் தவிர்ந்த தீர்வுகளே உகந்தவை என்பது மாக்ஸிய நிலைப்பாடாகிறது. அதேவேளை, இன ஒழிப்புப் போருக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடும் உரிமையை மாக்ஸியம் ஏற்கிறது. எதிரி யார், நண்பன் யார் என்ற விடயத்தில் மாக்ஸியர்களால் தெளிவாக மக்களையும் உண்மையான இனவெறியர்களையும் வேறுபடுத்திக் காணமுடியும். இங்கே விடுதலைப் போராட்டம் மக்கள் மத்தியிலான பகையாக வளர்வதைத் தடுப்பதற்கான நடைமுறையை மாக்ஸியம் நாடுகிறது. தேசியவாதத்தால் அது இயல்வதில்லை. அது எதிரியின் எதிரி நண்பன் என்ற விதமாகச் சந்தர்ப்பவாதக் கூட்டுக்களை ஏற்படுத்தி ஒரு ஒடுக்குமுறையின் இடத்தில் இன்னொன்றின் வருகையை ஏற்கச் சித்தமாகிறது. தேசிய நியாயம் என்பது தன்னால் வரையறுக்கப்பட்ட ஒரு தேசிய அடையாளத்தாற் சிறைப்படுத்தப்பட்ட நியாயம். அதனால் அந்தக் குறுகிய எல்லையைத் தாண்ட இயலாமை அதன் அறத்தின் பலவீனம். தேசிய நியாயம் வலியுறுத்தும் தேசிய நலன் பிற தேசிய இனங்களின் நலிவிலும் அழிவிலும் தன்னை மேம்படுத்துகிற போக்கை ஒட்டியது. தேசிய

முரண்பாடுகள் ஓய்வதாயின், தேசியவாதக் கண்ணோட்டத்தில் பிற தேசிய இனங்கள் ஒழிய வேண்டும். போர் இல்லாது இது இயலுமானதல்ல. ஹிற்லர் இவ்வாறான தேசியவாதத்தின் ஒரு உச்சக்கட்ட உதாரணம் எனலாம். மாக்ஸிய நியாயம் வர்க்கங்களின் ஒழிவை நாடுகிறது. அது முதலாளிய வர்க்கம் என்ற ஒன்று இல்லாது ஒழிவதை நாடுகிறது. இங்கு முதலாளிகள் என்ற சுரண்டும் வர்க்கம் இருப்பதற்கான நியாயம் ஒழிக்கப்படுகிறதே ஒழியத், தனிமனிதர் ஒழிக்கப்படத் தேவை இல்லை. ஆயினும் உலக முதலாளியம் (அதாவது ஏகாதிபத்தியம்) ஒடுக்கப்பட்ட மக்கள் மீது போரைத் திணிக்கிறது. எனவே ஆயுதமேந்திய போராட்டம் தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவை ஆகி விடுகிறது. ஆயினும் மாக்ஸியம் நாடுகிற தீர்வு மனிதரை மனிதர் சுரண்டவும் ஒடுக்கவும் இடமில்லாத ஒரு சமுதாய அமைப்பு. எனவே இன்றைய சமுதாய அமைப்பு அதன் தாக்குதலுக்குரிய பிரதான இலக்கே ஒழிய எந்தத் தனிமனிதரும் அல்ல. சோஷலிஸம் கம்யூனிஸமாகும் போது முதலாளி வர்க்கம் மட்டும் அழிவதில்லை. பாட்டாளி வர்க்கமும் ஒழிந்து வர்க்கமற்ற ஒரு மனித சமுதாயம் உருவாகிறது.

(புதியபூமி 1998)

www.padippakam.com

# சுயநிர்ணயத்தை விளங்கிக் கொள்வது பற்றி

பல மூன்றாம் உலக நாடுகளில் தேசிய இனப்பிரச்சினை ஏதோ ஒரு வகையில் மிக முக்கியமான ஒரு அரசியற் பிரச்சினையாகவும் மோதல்கட்குக் காரணமாகவும் இருந்து வருகிறது. ஸ்திரமான அரசியல் நிலவரத்தையும் பொருளாதார விருத்தியையும் பேண வேண்டுமாயின் இப் பிரச்சினை திருப்திகரமாகத் தீர்க்கப்பட வேண்டும். அதுமட்டுமன்றி மூன்றாமுலக நாடுகளின் ஜனநாயகமும் மனித உரிமையும் தொடர்பான பிரச்சினைகளும் இத் தீர்வுடன் தொடர்புடையன. இதற்கான சாட்சியம், இலங்கை மக்களைப் பொறுத்தளவில், மிகவும் அருகிலேயே உள்ளது.

கொலனி ஆட்சிக் காலத்தின் பின்பு, தேசிய இனப் பிரச்சினையின் தன்மை மாறியுள்ளது. ஆயினும் தேசியவாதத்தின் இரண்டு முகங்களும் அன்று இருந்தவாறே உள்ளன. முற்போக்கான, விடுதலை வேண்டும் முகம் ஒன்று; பிற்போக்கான, குறுகலான, ஒடுக்குமுறை சார்ந்த முகம் ஒன்று. கொலனி ஆட்சிமுறையின் கீழ் சமத்துவவாத அரசியலுடன் கைகோத்து மக்களை விடுதலைப் போராட்டத்தில் ஒன்றுபடுத்திய முற்போக்கான நிலை இன்று படிப்படியாக மாறி, பேரினவாத, தேசிய ஒடுக்குமுறைக்கு வழிவிட்டுள்ளது. இந்த மாற்றம் சடுதியானதல்ல. ஏனெனில் மூன்றாம் உலகம், முக்கியமாக அணிசேரா நாடுகளின் இயக்கத்தினுள், பெருவல்லரசுகளை எதிர்ப்பதிலும் ஏகாதிபத்தியத்தின் உலக ஆதிக்கத்தை மறுப்பதிலும் ஒரு முக்கியமான பங்கு வகித்தது. மூன்றாமுலக நாடுகளின் அதிகார வர்க்கங்களால் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்க இயலாது போனதால் இந்த நாடுகளின் தேசியத் தலைமைகள் பலம் இழந்தன. இது, மூன்றாமுலக நாடுகளின் நலன் பேணும் ஒரு அமைப்பாக இயங்கிய அணிசேரா நாடுகளின் இயக்கத்தை வீழ்ச்சியடையச் செய்தது.

பெரும்பாலான மூன்றாமுலக நாடுகளின் தலைமைகளால் அரசியல், பொருளாதாரச் சுதந்திரங்களைப் பாதுகாக்க இயலாது போனது அதிசய-



படிப்பகம்

மில்லை. ஏனெனில் அவை உள்நாட்டின் சுரண்டும் வர்க்கத்தின் பிரதிநிதிகளாகவும் சமுதாய மாற்றத்தை விரும்பாதவையாயுமே இருந்தன. சில ஆட்சிகள், சீர்திருத்தங்கள் மூலம் புரட்சியைத் தவிர்க்க உதவும் அளவுக்குள், சீர்திருத்தவாத ஆட்சிகளாகவே இருந்தன. பிற்காலத்தே, பல சீர்திருத்தங்கள், "ஜனநாயகம்", "மனித உரிமை" ஆகியவற்றின் மேல்நாட்டுப் பாதுகாவலர்களுடைய ஆசியுடன் வலதுசாரி அரசாங்கங்களால் இல்லாமலாக்கப்பட்டன.

கொலனிகளில் அரசியற் சுதந்திரம் வறுமைப்பட்ட சனங்களின் சமுதாய, அரசியல் உணர்வை உயர்த்தியது. எனவே அவர்கள் நாட்டின் செல்வத்திற் தமக்கும் ஒரு நியாயமான பங்கை வேண்டினார்கள். தொழிலாளி வர்க்கம் ஆட்சியாளர்கட்கு ஒரு மிரட்டலாகத் தெரிந்தது. மக்கள் மத்தியிலிருந்த முரண்பாடுகளைப் பயன்படுத்தி அவர்கள் மத்தியில் பகைமையை மூட்டிப் பிளவுபடுத்துவது ஆளும் வர்க்கத்தினருக்கு வாய்ப்பாக இருந்தது. இப் பாடத்தை முன்னாட் கொலனித்துவ எசமானர்களிடமிருந்து அவர்கள் நன்றாகவே கற்றிருந்தார்கள். இனம், மொழி, மதம், சாதி போன்று, பயன்படக்கூடிய ஒவ்வொரு வேறுபாட்டையும் பாராளுமன்ற அரசியலிலும் வெளியிலும் பயன்படுத்தினார்கள். இது, சிலகாலத்துக்காயினும் மக்களது கவனத்தை அவர்களது முக்கியமான பிரச்சினைகளிலிருந்து திசை திருப்பியது. ஆனாலும் நாட்டின் பொருளாதாரமும் அரசியல் ஸ்திரத்தன்மையும் பாதிக்கப்பட்டன. ஆளும் வர்க்கத்தினர் மேலும் மேலும் தமது பாதுகாப்புக்காக ஏகாதிபத்தியத்தின் மீது தங்கியிருக்க நேரிட்டது.

மூன்றாம் உலகில் வறுமையும் கடனும் அதிகரித்தன. உலக வங்கி, சர்வதேச நாணய நிதி (ஐ. எம். எஃப்.) போன்ற நிறுவனங்கள் உட்பட்ட தனது ஏவல் அமைப்புக்கள் மூலம் வறிய நாடுகளின் சமுதாயக் கொள்கையும் பொருளாதாரக் கொள்கையும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கட்டளையிட ஏகாதிபத்தியத்திற்கு முடிந்தது. உள்நாட்டு யுத்தத்தைக் கிளறிவிடவும் அதற்கு இயலுமாகியது. மொத்தமாகப் பார்த்தால் மூன்றாம் உலகில் இன்றைய நிலைமை பல வழிகளில் கொலனித்துவத்தின் கீழ் இருந்ததை விட மோசமாகவே உள்ளது. நவகொலனித்துவத்தின் கீழ் எதிரி கண்மறைவாக உள்ளான். ஆளும் மேல்தட்டு வர்க்கங்கள் இந்தக் குழப்பத்திலிருந்து மீள வழிகாட்ட இயலாது உள்ளன. இந்த வர்க்கத்தினர் தாம் தப்பிப் பிழைப்பதற்காகத் தமது நாடுகளதும் மக்களதும் நலன்கட்குத் துரோகம் செய்கிறார்கள்.

மூன்றாமுலக நாடுகளின் தேசிய நெருக்கடியை இனங்கண்டு நிலைக்கக்கூடிய நியாயமான தீர்வுகளைத் தேடியறிய மிகுந்த தைரியமும் தீர்க்கமான

பார்வையும் அவசியம். சுரண்டும் வர்க்கங்களோ, மீண்டும் மீண்டும், தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதில் தயக்கத்தையும் இயலாமையையுமே காட்டி வந்துள்ளன. மக்களை ஐக்கியப்படுத்தி நாட்டின் அரசியல், பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்கவும் அவர்கள் இயலாதவர்களாகவே உள்ளனர். அவர்களது பிரதிநிதிகளாகச் செயற்படும் அரசாங்கங்களும் தேசிய ஒடுக்குமுறையில் லாபம் தேடுகின்றன. உயர் வர்க்கத்தின் நலன்களைப் பேணும் சமுதாய அமைப்புக்குக் கேடான முரண்பாடுகள் தவிர்ந்த சகல வகைகளிலும் அவை மக்களைப் பிளவுபடுத்துகின்றன. முற்போக்கானதும் சமுதாய நீதிக்கானதுமான சக்திகள் மட்டுமே உருப்படியான தீர்வுகளைத் தர வல்லன. ஒடுக்கப்பட்ட மக்களைத் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் ஒன்றுபடுத்தும் தேவையை அவர்கள் அறிவார்கள்.

இந்தப் பின்னணியிலேயே, தேசியத்தன்மை, சுயநிர்ணயம் ஆகிய கோட்பாடுகள் பற்றி அலசுவது பயனுள்ளது. துரதிஷ்டவசமாக ஒரு சில "இடதுசாரிகள்" உட்படச் சிலர் மிகவும் பிடிவாதமாக வரைவிலக்கணங்களில் தொற்றிக் கொண்டிருக்கிறார்கள். விஷயங்களை விளங்கிக் கொள்ள வரைவிலக்கணங்கள் பயன்படுகின்றன. கட்டுப்பாடுகளை விதிக்கும் முறையில் அவற்றின் பெறுமதியை விட விளக்கம் தரும் முறையில் அவற்றின் பெறுமதி அதிகம். தேசம் பற்றிய ஒரு வரைவிலக்கணம், தேசம் என்பது என்ன என்று சிறிது விளங்கிக் கொள்ள உதவும். ஆயினும் ஒரு மக்கள் குழு ஒரு தேசமாக அமையக்கூடுமா என்று விதிக்க அதற்கு இயலாது. ஒரு அரசியற் பிரச்சினையில் சில வழிகாட்டல்களைப் பெற ஒரு வரைவிலக்கணம் உதவலாம். விறைப்பாகவும் வரட்டுத்தனமாகவும் அவ் வரைவிலக்கணம் பயன்படும்போது விளைவுகள் விபரீதமாக அமையலாம்.

தேசங்கள் தமது இருப்பை நியாயப்படுத்தும் வரைவிலக்கணங்கட்காகக் காத்திருப்பதில்லை. இனம், மொழி, பண்பாடு போன்ற பொதுப் பண்புகள் ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு தேசமாக ஒன்றுபடுத்தலாம். ஆயினும், தேசம் என்பது, அனைத்திலும் முக்கியமாக, வரலாற்றின் விளைபொருளே ஆகும். எனவே தான், இன, மொழி, பண்பாட்டு வேறுபாடுகள் கடந்த தேசங்களை நாம் காண்கிறோம். அது போலவே, பொதுவான பண்புகள் பல இருந்தும் ஒரு தேசமாக இணையத் தவறுகிற தேசங்களையும் காண்கிறோம்.

ஒரு தேசத்தின் பிரிந்து போகும் உரிமை பற்றிப் பேசும் போது, அதன் சாத்தியப்பாடு பற்றியும், அதைவிட அதிகமாக, ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவுக்குத் தேசமாகும் தகுதி பற்றியும் கேள்விகளை நாம் சந்திக்கிறோம். ஒரு தேசத்திற்கும் தன்னால் ஒரு தேசமாக நிலைக்கும் ஆற்றல் உண்டா என்பது அதற்கு எந்த வரைவிலக்கணத்தின் அடிப்படையிலும் ஒரு

தேசமாகும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதை விட முக்கியமானது. சனத்தொகை அடிப்படையிலும் பிரதேச அடிப்படையிலுமான அளவு முக்கியமானது. ஆயினும் தீர்மானமானதல்ல. ஒரு தேசத்தின் ஆக்கத்தில் முக்கியமானது ஏதெனில் ஒரு மக்கள் குழுவை ஒன்றுபடுத்தித் தாம் ஒரு அரசியல் சமுதாய அமைப்பிற்கு உரியவர்கள் என்ற உணர்வை உருவாக்கும் ஆற்றல்தான். சில இந்தியத் தீவிர இடதுசாரிகள், இந்திய ஒன்றியம் பிளவுபட வேண்டும் எனவும் தேசிய இனங்கள் என்ன நினைத்தாலும் அவை பிரிந்து போவது ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும் நினைக்கிறார்கள். மறுபுறம், துரதிஷ்டவசமாகச் சில இடதுசாரிகள் உட்பட, இந்தியா ஒரு பலதேச அரசு என்பதை உணரமுடியாத இந்தியத் தேசியவாதிகள் உள்ளனர். சிறுபான்மைத் தேசங்களதும் குலக்குடிகளதும் பிற இனப்பிரிவுகளதும் விருப்பங்கட்குத் தடையாக இந்தி-இந்து தேசியவாதமும் முதலாளித்துவப் பேராசையும் உள்ளன. இவ்விடத்து உலகின் மிகவும் சிக்கலான தேசியப் பிரச்சினை இந்தியாவினது என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்தியா என்பது பல தேசிய இனங்களதும் இனப்பிரிவுகளதும் சிக்கலான ஒரு இணைப்பு. இத் துணைக்கண்டத்தைக் கூறு போட்டுத் தேசிய அரசுகளாக மாற்றுவது நல்ல தீர்வாக இருக்க அவசியமில்லை. ஆயினும் இந்தியாவின் ஐக்கியமும் உறுதிப்பாடும், அவை எவ்வளவுதான் விரும்பத்தக்கனவாயினும், தேசிய இனங்களதும் குலக்குடிகளதும் பிற இனப்பிரிவுகளதும் சமத்துவத்தின் அடிப்படையில் தேசியப் பிரச்சினையை அணுகாமற் சாத்தியமாகமாட்டா.

சமூக அரசியல் விழிப்புணர்வின் காரணமாகவும் பல சமயங்களில் ஒடுக்குமுறையின் விளைவாகவும் தேசங்கள் உருவாகின்றன. இலங்கையில் தமிழ்த் தேசியவாதத்தின் தோற்றத்தைப் பொறுத்தவரை இது குறிப்பாகப் பொருந்தும். இலங்கையின் "தமிழ்த் தேசம்" எனப்படுவது எவ்வகையிலும் நாலு நூற்றாண்டுகள் முன்னம் வரை இருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் வாரிசும் அல்ல, இத் தீவில் வாழும் சகல தமிழ்ப் பேசும் மக்களையும் உள்ளடக்கியதும் அல்ல. தமிழ் அடையாள உணர்வைத் தேசியவாதமாக மாற்றியது நாட்டின் சுதந்திரத்திற்கு முன்பிருந்து நடந்து வந்துள்ள நிகழ்ச்சிகளின் தொடரே ஆகும். 1948ம் ஆண்டின் பிரசாவுரிமைச் சட்டம், 1956ம் ஆண்டின் அரச கரும மொழிச் சட்டம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்கள், மீண்டும் மீண்டும் நடந்தேறிய தமிழர் விரோத வன்முறைச் சம்பவங்கள், 1971ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதி முறையில் புகுத்தப்பட்ட தரப்படுத்தல் ஆகியவற்றுக்கும் அப்பாலே தான் அந்த உருமாற்றம் நிகழ்ந்தது.

1977ல் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்குக் கிடைத்த பெரும்பான்மை வாக்கு தனிநாட்டுக் கொள்கைக்குக் கிடைத்த வாக்கு என்பது 1956ல் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த பெரும்பான்மை வாக்கு சமஷ்டிக் கொள்கைக்குக் கிடைத்த வாக்கு என்பதன் அளவையொத்த சிறிய அங்கீகாரமே. 1977க்குப் பின்பு தொடர் தொடராக நடந்த ஏமாற்றுக்களும் தங்களுடைய பாரம்பரிய மண்ணிலேயே தாங்கள் பாதுகாப்பாக வாழ இயலாது என்ற நிலைமையும் சேர்ந்தே தமிழ்த் தேசிய இனத்தை இன்றைய தேசிய விடுதலைக்கான போராட்டத்திற்குள் தள்ளிவிட்டன.

இலங்கைக்கு ஒரே ஒரு அடையாளம், அதாவது சிங்கள அடையாளம் (முடியுமானால் சிங்கள பௌத்த அடையாளம்) மட்டுமே இருக்க முடியும் என்கிற சிங்களப் பேரினவாதிகளே தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய அடையாளத்தை மறுப்பதில் முனைப்பாக உள்ளனர். இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் ஒன்று இருப்பதை மறுப்பது வரலாற்றின் மீதான விஷமம். தமிழ்த் தேச-அரசு நடைமுறைச் சாத்தியமானதா என்பதை மறுக்கிற வாதங்கள் நேர்மையீனத்தின் விளிம்பைத் தொடுகின்றன. தனித் தமிழ் அரசு ஒன்று நடைமுறைச் சாத்தியமா என்ற கேள்வி, அது விரும்பத்தக்கதா என்ற கேள்வியிலிருந்து வித்தியாசமானது.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய அனைவரதும் நலனுக்கு ஏற்றது ஐக்கிய இலங்கையே என நம்புவோர் பலர் உள்ளனர். ஆனாலும், இந்த ஒற்றுமையை சிறுபான்மைத் தேசிய இனங்கள் மீது, அதுவும் கடந்த சில பத்தாண்டுக் கால நிகழ்வுகளை மனதிற் கொள்ளும் போது, சுமத்த இயலாது எனத் தெரியும். இலங்கையை ஒரு ஐக்கிய நாடாகப் பேணுவது, சிறுபான்மைத் தேசிய இனத்தவர்கள் பெரும்பான்மைத் தேசிய இனத்தவரால் சமமாக நடத்தப்படுவாரா என்பது பற்றிக் கொண்டுள்ள ஐயங்களைக் களைவதில் தங்கியுள்ளது. இப்போது இலங்கையின் வடக்கு, கிழக்கின் தமிழ் மக்கள் தமது தேசியத் தன்மையை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். அதை மறுப்பது உண்மை நிலையை மறுப்பதாகும். ஐக்கிய இலங்கை, தேசங்களின் ஒன்றியமாக மட்டுமே அமைய முடியும். சுயவிருப்பின் அடிப்படையிலானதாக இருந்தால் மட்டுமே அது உறுதியான ஒன்றியமாக இருக்க முடியும். எனவே பிரிந்து போகும் உரிமையை அது உள்ளடக்க வேண்டும். சுயநிர்ணயம் இதையே செய்கிறது.

சுயநிர்ணயம் என்றால் பிரிந்து போகும் உரிமை என்று அர்த்தமாகிறது. ஆனால் அது பிரிந்து போகிற காரியமாகும் அவசியமில்லை. அதை மணமுறிவுக்கான உரிமையுடன் ஒப்பிடலாம். இந்த உரிமை இருப்பதால்

ஒவ்வொரு திருமணமும் மணமுறிவில் முடிய வேண்டியதில்லை. மணமுறிவுக்கான உரிமையின்றித் திருமண வாழ்வு ஒரு சிறை போன்றதாகி விடும். அந்த உரிமையின் மறுப்பு உண்மையில் மணவாழ்வைக் காப்பதற்கு உத்தரவாதமாகாது. பிரிந்து செல்வதற்கான உரிமை உள்ள தம்பதிகளிடையிலான உறவு அந்த உரிமை இல்லாத உறவை விடச் சமத்துவமானதும் உறுதியானதுமாகும். தேசங்களின் ஒன்றியம் ஒன்றில், பிரிந்து செல்லும் உரிமை, அந்த ஒன்றியத்தின் உறுப்பினர்களை மேலும் பாதுகாப்புடையவர்களாக உணர வைப்பதுடன், சமமான பங்காளிகளாக இணைந்து வாழ்வதை இயலுமாக்க மிகச் சிறந்த வழிகளைத் தேடவும் அவர்களைத் தூண்டுகிறது.

அரசாங்கம் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மீது தொடுத்துள்ள போரிற்கு எதிரான தமிழ் மக்களது போராட்டத்துடன் எந்த விதமான உறவும் இல்லாத சில தமிழ்த் தேசியவாதிகள் சுயநிர்ணயம் என்பதற்கு ஒரே ஒரு பொருள் தான் உண்டு எனவும், அது பிரிந்து போவது என்பதே என்றும் வாதித்து வந்துள்ளனர். விடுதலைப் புலிகள், ஐக்கிய இலங்கை என்ற வரையறைக்குள் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க முயலும் போது, அவர்களைத் துரோகிகள் என்று அழைக்கவும் முற்படுகிறார்கள். இது சிங்களப் பேரினவாதிகளின் நிலைப்பாட்டை ஒத்தளவு விஷமத்தனமே.

சுயநிர்ணயம் என்றால் என்ன என்பதை அதன் முழுமையான பொருளில் சிங்கள வெகுசனங்கட்கு விளக்கி அவர்கள் பேரினவாதிகளால் திசை திருப்பப்படாமல் தடுப்பது சிங்கள முற்போக்காளர்களின் கடமையாகும். சுயநிர்ணயம் என்றால் பிரிவினைக்கான உரிமை என்பதை விட விரிவான பொருளை உடையது என அறிய மக்களுக்கு உரிமை உண்டு. முக்கியமாக, ஐக்கிய இலங்கை என்ற வரம்பிற்குள், சம்பந்தப்பட்ட தேசிய இனங்கள் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகளை ஆராய்வதற்கான உரிமையையும் அது குறிக்கிறது என்பதும் விளக்கப்பட வேண்டும். சிறந்த தீர்வு சமஷ்டி அரசு முறையா பிரதேச சுயாட்சியா வேறுவகையான தன்னாட்சி முறையா என்பது கலந்தாலோசித்துத் தீர்மானிக்க வேண்டிய விடயம். எவ்வாறாயினும், ஒரு தீர்வின் உறுதிப்பாடு, சனநாயகத்தை வலுப்படுத்தும் நோக்கில் அதிகாரத்தின் அதிகபட்சப் பரவலாக்கத்தால் மேலும் வலுப்பெறும் என்பது இங்கு வற்புறுத்தப்பட வேண்டும்.

சுயநிர்ணயம் என்பது தேசிய இனங்களின் சுதந்திரமான தெரிவு எனவும் தேசிய இனப் பிரச்சினைக்கு நிலையான, உறுதியான, நீதியான தீர்வை அடைவதற்கான ஒரே வழி எனவும் விளக்குவதற்கு முற்போக்காளர்கள் தவறுவார்களானால் அவர்கள் இலங்கையின் ஐக்கியத்துக்கான வாய்ப்புக்கு ஆப்பு வைக்கவே உதவுவார்கள். இத் தவறு, 1956க்கும் 1977க்கும் இடையில்

பாராளுமன்ற இடதுசாரிகள் செய்த தவறுகளை விடப் பாரியதாகும். அன்று யூ. என். பி. யிலும் ஸ்ரீ. ல. சு. கட்சியிலும் இருந்த சிங்களத் தேசியவாதிகள் சமஷ்டி என்றால் பிரிவினை என்று திரித்துக் கூறிவந்த போது, பாராளுமன்ற இடதுசாரிகள் மௌனம் காத்தனர். அவர்களது சந்தர்ப்பவாதம் ஸ்ரீ. ல. சு. கட்சிக்கும் அதிலும் அதிகமாக யூ. என். பிக்கும் நன்மையானது. 1977 முதல் பதினேழு வருட யூ. என். பி. ஆட்சிக் காலத்திலிருந்து இந்த இடதுசாரிகள் எதையுமே கற்கவில்லை என்றால், அந்த வரலாற்றை விரைவில் மீண்டும் அனுபவிப்பதற்கு அவர்கள் விதிக்கப்பட்டவர்களாவார்கள்.

**(ஆங்கில மூலம்: Tamil Times 1996)**

www.padippakam.com

# சுயநிர்ணயத்தின் பயன்பாட்டை விரிவாக்குவது பற்றி

ஒரு சமூக அரசியல் அமைப்பென்றவாறு ஒரு தேசம் தன் இருப்பின் தன்மையை நிர்ணயிக்கும் உரிமை என்றவாறாகவே சுயநிர்ணயம் என்பது பரவலாக விளக்கப்பட்டுள்ளது. ஒரு தேசத்திற்கு அரசாக அமையவும் பொருத்தமான இடத்துப் பிரிந்து போகவுமான உரிமையை அது குறிக்கிறது. பல தேசங்களை உள்ளடக்கிய ஒரு அரசின் வரம்புக்குள் தேசங்களை ஒன்றிணைக்கவும் தொடர்ந்தும் கூடி வாழவும் சுயநிர்ணயம் இயலுமாக்குகிறது.

சுயநிர்ணயக் கொள்கையைத் தேசங்களுடனேயே சேர்த்துக் கருதுவதன் விளைவாக, அதன் அடிப்படையான நியதி தேசமாக வரையறுக்கத் தக்க அல்லது தேசமாக அடையாளங் காணப்படுகிற மக்கள் குழுக்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஓரளவுக்கு இதன் விளைவாக, தம்முடைய சுய அடையாளத்தைக் காக்கவும் தனித்துவமான ஒரு சமூகப் பிரிவாகத் தமது இருப்பைப் பேணவும் வேண்டுகிற மக்களின் வெகுசன இயக்கங்கள், அந்த மக்களை வெறுமனே ஒரு தேச அரச அமைப்புக்கு உட்பட்ட ஒரு சமூகப் பிரிவாக அன்றி ஒரு தேசமென்று வலியுறுத்தும் போக்கைக் கொண்டுள்ளன.

இனத்துவக் கோட்பாடு பற்றி இன்று விரிவாகப் பேசப்படுகிறது. எந்த ஒரு இனப்பிரிவும் அது விரும்புகிற வரைக்கும் தனித்துவமான ஒரு சமூகப்பிரிவாகத் தன் அடையாளத்தைப் பேணுவது ஊக்குவிக்கப்படாது போனால் அனுமதிக்கப்படவேனும் வேண்டும் என்று வாதிப்போர் உள்ளனர். மறுபுறம், இவ்வாறு தனித்துவமான அடையாளம் பேணப்படுவது தேசிய ஒற்றுமைக்குத் தீங்கானது என்று சிறுபான்மை இனப்பிரிவுகள் பெரும்பான்மையால் உள்ளுறுஞ்சப்படாதவிடத்து பெரும்பான்மைப் போக்குடன் ஐக்கியப்படுவதைப் பரிந்துரைப்போர் உள்ளனர். இவ்வாறான எதிரெதிரான இரண்டு நிலைப்பாடுகட்கும் ஆதரவாக வலதுசாரிக் கண்ணோட்டத்திலும் இடது-

சாரிக் கண்ணோட்டத்திலும் வாதங்கள் முன் வைக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். எமது நோக்கங்கள் எவ்வளவு உயர்வானவை-யாயினும், மக்கள் குழு ஒன்று தனது இன அடையாளத்தையோ வேறு எந்த அடையாளத்தையோ வலியுறுத்த முற்படுவது ஏனென்ற காரணத்தை நாம் கவனிக்காமல் விடலாகாது. அது மட்டுமன்றி, எந்த ஒரு இனப்பிரிவும், ஒரு சிறுபான்மைத் தேசிய இனமோ பெரும்பான்மை இனமோ போன்று, தனது அடையாளத்தைப் பேணும் உரிமையை மறுப்பது நல்லதல்ல. சிறுபான்மை இனப்பிரிவுகள், பல சந்தர்ப்பங்களிலும், தமது அடையாளத்தப் பேணுவ-தற்குத் தேசங்கட்கு உள்ள உரிமையிலும் குறைவான உரிமையை உடைய சமூகப் பிரிவுகளாகவே நடத்தப்பட்டுள்ளன. இது பெரும்பாலும் ஒரு மக்கள் திரள் தனது அடையாளத்தைப் பேணுவதற்கான உரிமையைத் தேச அரசு, தேசமாகும் உரிமை ஆகியவற்றின் கண்ணோட்டத்தில் அணுகுவதன் விளைவு என்றே தோன்றுகிறது. தேச அரசு பற்றிய கொள்கை முதலாளியத்திற்குப் பிற்பட்டதும் ஐரோப்பாவில் தோன்றியதுமாகும். இன்றைய தேசியப் பிரச்சினை மேலுஞ் சற்றுச் சிக்கலானதும் தேசங்கள் இணங்கி வாழும் தேவை சார்ந்ததுமாக அணுகப்பட வேண்டியதாகும். அதினும் முக்கியமாக, தனித்-துவமான ஒரு சமூகமாக ஒரு தேசம் தனது இருப்பின் வகைப்பாட்டைத் தீர்-மானிக்கும் உரிமைக்கு அடிப்படையாக உள்ள நியதி, வெறுமனே, எவ்வாறோ தேசமாக அடையாளங் காணப்படக்கூடிய மக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்-தப்படக் கூடாதது. தமது இன அடையாளம் எவ்வளவு வலிதானபோதும், தேச-மாக அமைய முடியாத இனப்பிரிவுகட்கும் அது விரிவுபடுத்தப்பட வேண்டும்.

தேசங்கள் வரைவிலக்கணங்களால் உருவாவதில்லை, மாறாக அவை வரலாற்றுச் செயற்பாடுகளின் போக்கில் உருவாகின்றன. ஒரு குறிப்பிட்ட இனக்குழுவை ஒரு தேசமாக ஆக்குவன எவை என்பதில் தர்க்கரீதியாகவும் அர்த்தமுள்ளதாகவும் அதிகம் இருப்பதில்லை. ஒரு சமூகக் குழுவினரின் தேசியம் பற்றிய புரிந்துணர்வு, தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும், வரலாற்றுப் பண்புடையதும் நிலவரம் சார்ந்ததுமாகும். எவ்விதமான இன உணர்வோ தேசிய உணர்வோ அவர்களைத் தமது தேசியத்தை வலியுறுத்-தவும் தமக்கான தேச அரசை நிறுவவும் செயற்படுமாறு நிர்ப்பந்திக்கத் தன்னளவிற் போதுமானதல்ல. தேசிய ஒடுக்குமுறையே பெரும்பாலும் புதிய தேச அரசுகள் உருவாகக் காரணமாகியுள்ளது.

தேசியவாதத்தைத் தனது சித்தாந்தமாகக் கொண்டுள்ள எந்தச் சுரண்டும் வர்க்கத்தின் ஒடுக்கு முறையும், தங்களைக் காத்துக் கொள்ளவும் தம்மளவிலான ஒரு சமூக அரசியல் அமைப்பாகத் தங்களைப் பேணவுமான உணர்வையும் போராட்டத்தையும் ஒடுக்கப்பட்ட மக்களிடையே தூண்டி

விடுகிறது. எந்த ஒரு சமூக இனப்பிரிவும் சுயநிர்ணய உரிமை என்ற வடிவிலான லைசென்சுக்குக் காத்திருப்பதில்லை. அந்த உரிமையின் மறுப்பு உண்மையில் போராட்டத்திற்கான மன உறுதியையும் பிரிந்து போகும் வேட்கையையுமே வலுப்படுத்துகிறது. இவ்வகையில், தேசங்கட்கு மட்டுமே செல்லுபடியான சுயநிர்ணய உரிமை என்பது புதிதாக எதையும் கூறவில்லை. எனவே சுயநிர்ணயத்தின் உண்மையான பெறுமதி, தேசங்கள் நடுவே தம் சுயவிருப்பின் அடிப்படையில் சுமுகமான கூட்டமைப்பு இயலாது போகும் போது, விலகிச் செல்லும் அதிகாரமுடைய சமமான பங்காளிகளாக அவற்றை ஒரு கூட்டமைப்பாக ஒன்றுபடுத்துவதிலேயே தங்கியுள்ளது.

சுயநிர்ணய உரிமையை தேசங்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ள முடியுமான சமூக இனப்பிரிவுகட்கு மட்டுமே உரியதாக வரையறைப்படுத்துவது உலகின் பல்வேறு சமூக இனப் பிரிவினரதும் நலன்கட்கு விரோதமான தன்மையை உள்ளடக்குகிறது. அவ்வாறு அமைய முடியாத சமூக இனப் பிரிவுகள் பலவற்றின் சனத் தொகைகள் தனித்தனியே சில தேசங்களினது சனத்தொகைகளிலும் அதிகமானவையுமாகும்.

உலகின் அதியுர்ந்த ஜனநாயக நாடு எனப்படும் அமெரிக்காவில் அம் மண்ணின் பூர்வ இனங்களதும், குலக்குடிகளதும் உரிமைகள் நாளாந்தம் தேய்வுண்டு அவர்கள் தமது சொந்த மண்ணிலேயே அகதிகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறே அதனிலும் குறைவான ஜனநாயக நாடுகளிலும் நடக்கிறது. அவுஸ்திரேலியாவின் பூர்வ குடிகள் தம் மண்ணிலேயே வீடற்றோராகியுள்ளனர். கொலனிய ஆட்சியாளர்களால் கூறுபோடப்பட்ட ஆபிரிக்காவில் தேசியப் பிரச்சினைகள் மிகவும் சிக்கலாக்கப்பட்டுள்ளன. என்றுமே தேசிய எல்லை எதையுமே அறிந்திராத நாடோடி இனத்தவரது வாழ்க்கை முறையும் தீங்காகப் பாதிக்கப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாகவே ஐரோப்பாவின் ஜிப்ஸிகளும் யூதர்களும் தேசியவாதக் கொடுமைகட்கு ஆளாகி வந்துள்ளனர். நக்ஸல்பாரி எழுச்சியின் போதும் அடுத்த தசாப்தத்திலும் மிகுந்த கவனத்தை ஈர்த்ததான இந்தியப் பூர்வ குடிகளது பிரச்சினை, இன்று, மீண்டும், இந்திய அரசியலில் ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளில் வலிய தாக்கம் செலுத்துகிறது.

மேற்குறிப்பிட்ட ஒடுக்கப்பட்ட மக்களிற் பெருவாரியானோர், அவர்களில் எந்த ஒரு இனப்பிரிவினரும் தம்மளவில் தேச அரசொன்றாக அமையும் வாய்ப்பே அற்றவர்கள் என்னும் வகையில், தேசங்களாக அமைய மாட்டாதவர்கள்.- இதனால் அவர்கள் சுயநிர்ணத்துக்கு அருகதையற்றோராகி விடமுடியுமா? சுயநிர்ணய உரிமை என்பதைப் பிரிந்து போகும் உரிமையாக மட்டுமே கருதினால் இம் மக்கள் அந்த உரிமையை அனுபவிக்க இயலாதவர்களே.

சுயநிர்ணயத்திற்குத் தகுதியை மறுக்க இதுவே அளவுகோலாகும் என்றால் அது சுயநிர்ணயத்தின் நியாயத்தைத் திரிபுபடுத்துகிற ஒரு காரியமாகும். தேசங்கட்குச் சுயநிர்ணயத்தைப் பிரயோகிக்கும் போது அது பிரிந்து போகும் உரிமையை உள்ளடக்குவது ஏனெனில் அந்த உரிமை சுயநிர்ணயத்தை அதன் அதி உயர்ந்த மட்டத்திற் பிரயோகிப்பதைக் குறிக்கிறது என்பதாலேயே. அந்த வாய்ப்பு இல்லாத இடத்தில், சமூக, அரசியல், புவியியல் வரையறைகள் பிரிவினையை இயலாதவாறு தடுக்கும் சூழ்நிலையில், மக்களுக்கு முன் ஒரு தெரிவு இருக்க வேண்டும்.

இந்தியாவில் பூர்வகுடிகளின் சுயநிர்ணயத்தின் மறுப்பின் விளைவாகவே வடகிழக்கு இந்தியாவின் மலைவாழ் பூர்வகுடிகள் தங்களுக்கான ஒரு "ஜார்கண்டம்" உருவாக்கப்பட வேண்டுமென்று கோர முற்பட்டனர். தம்மிடையே பலவேறு மொழிகளைப் பேசுவோரும் பலவேறு பண்பாட்டுப் பாரம்பரியங்களை உடையோரும் பொதுவான ஒரு சமூக அரசியல் வரலாறு அற்றவர்களுமான இப் பூர்வகுடிகள் தேசம் என்று பொதுப்பட அறியப்படும் வகையிலான ஒரு தேசிய அடையாளத்துக்குள் அமைய மாட்டார்கள். இவர்களது கோரிக்கைக்கும் இருபதாம் நூற்றாண்டின் முன் பாதியில் இந்தியத் துணைக் கண்டத்தில் முஸ்லீம்கட்கான ஒரு நாடு வேண்டும் என்று எழுந்த கோரிக்கைக்கும் உரிய பின்னணிகளின் இடையிலான சில ஒற்றுமைகளை ஒருவர் தவற விட இடமில்லை. பூர்வகுடிகட்கான ஒரு தாயகம் நடைமுறைச் சாத்தியமானதா என்ற பிரச்சினை அக்கோரிக்கைக்குக் காரணமான பிரச்சினைகளினின்று வேறுபட்டு நிற்கிறது. எனினும் அதற்கான காரணங்கள் விரைவில் நீங்கி விடப் போவதில்லை.

இந்தியாவில் உள்ள அதிதீவிர இடதுசாரிகள் சிலர் இந்திய ஒன்றியத்தின் குலைவு அவசியமானதென எண்ணி, சம்பந்தப்பட்ட தேசிய இனம் பிரிவினை பற்றி அக்கறை காட்டாத இடத்திலும் கூடப் பிரிவினையைப் பரிந்துரைக்கின்றனர். மறுபுறம் இந்திய தேசியவாதிகள் எனப்படுவோர் இந்தியா ஒரு பல தேச அரசு என்பதையும் இந்து-இந்தி பேரினவாதத்தின் காரணமாயும் முதலாளியப் பேராசை காரணமாயும் இந்தியாவின் சிறுபான்மைத் தேசங்களதும் பூர்வ குடிகளதும் பிற சிறுபான்மை இனப்பிரிவுகளதும் அபிலாட்சைகளை இன்று நிறைவு செய்ய முடியவில்லை என்பதையும் காண மாட்டாதவர்களாக உள்ளனர்.

தேசியவாதம் விடுதலைப்பண்பும் அடக்குமுறைப்பண்பும் தன்னுட் பொதிந்த இரட்டை இயல்புடையது என நாம் நமக்கு மீள நினைவூட்ட வேண்டியதில்லை. இது தொடர்பாக, தனது தேசிய சுயநிர்ணயத்துக்காகப் போராடும் ஒரு தேசம் தனது தேசிய எல்லைகட்கு உட்பட்ட சிறுபான்மை-

www.padippakam.com

யினருக்கு அதே உரிமையை மறுப்பதை நாம் காண முடிகிறது. 20ம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து சிங்களப் பேரினவாதத்தின் நிலைப்பாடு இவ்வாறான ஒன்றே. தனது தோற்ற நிலையின் போதிருந்து இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் நிலைப்பாடும் அவ்வாறானதே.

தமிழ்த் தேசியவாதம் என்றால் யாழ்ப்பாண வெள்ளாள உயர் வர்க்கத்தினரின் நலன்கள் என்றே அண்மைவரை விளங்கப்பட்டு வந்துள்ளது. தமிழரசுக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் முஸ்லிம்களதும் மலையகத் தமிழ் மக்களதும் தனித்துவமான அடையாளங்களைத் தமிழ் பேசும் மக்கள் என்ற போர்வையின் கீழ் மறைக்க முனைந்தன என்பதும் அவற்றின் அரசியல் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டது என்பதும் கவனிக்க வேண்டியன. பிரதான தேசிய இனங்கள் எவையுமே இம் மண்ணின் பூர்வ குடிகளான வேடர் பற்றியோ அபிவிருத்தி முயற்சிக்கு இழக்கப்பட்ட அவர்களது தாயகம் பற்றியோ கவலை காட்டியதில்லை. நம்நாட்டு நாடோடிகளும், றொடியா சமூகமும் தென்னிலங்கையின் சிங்களச் சமூகத்தினராற் புறமொதுக்கப் பட்டவர்களாவர்.

இந்திய மேட்டுக்குடிகள் பரிந்துரைக்கும் விருத்தியின் விளைவாகவும் முதலாளியப் பேராசையாலும் இந்தியாவின் பூர்வகுடிகள் தமது பாரம்பரிய மண்ணின் மீதான தமது ஆளுமையை இழந்து வருகின்றனர். தமது வாழ்க்கையையும் சீவனோபாயத்தையும் பாதிக்கின்ற விடயங்கள் தொடர்பாக அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பில்லை. அவர்களது மேய்ச்சல், பயிர் விளைச்சல், வேட்டை நிலங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளால் அவர்கட்கு நிச்சயமாக ஒரு பயனும் கிட்டுவதில்லை.

இவ்வாறான நடவடிக்கைகளைச் சிலர் தேசிய அபிவிருத்தியாகவும், சிலர் பூர்வ குடிகளைத் தேசிய நீரோட்டத்திற்குள் இணைக்கும் செயலாகவும் காணுகின்றனர். எவ்வாறாயினும், மிகவும் சரியாகவே, சுற்றுச் சூழல் பற்றிய அமைப்புக்களும் இந்தியப் பெண்ணியக் குழுக்கள் சிலவும் இதை வேறு விதமாகக் காணுகின்றன. நியாயமாகச் சொன்னால், 1960களின் பிற்பகுதியிலும் 1970 களின் முற்பகுதியிலும், நக்ஸல்பாரி இயக்கத்தினர், நகரத்து முதலாளியப் பேராசைக்கு எதிராகப் பூர்வ குடிகளது போராட்டங்களை ஆதரித்தனர். எவ்வாறாயினும் இந்த இனப்பிரிவினர் தாம் விரும்பும் பட்சத்தில் நவீன சமுதாயம் நோக்கித் தமது அபிவிருத்தியின் முனைப்பையும் வேகத்தையும் தீர்மானிப்பதற்கான உரிமை பற்றி அதிகம் சாதிக்கப்படவில்லை.

ஆசியாவினதும் லத்தீன் அமெரிக்காவினதும் பூர்வ குடிகளது நிலைமை இந்தியாவின் பூர்வ குடிகளது நிலைமையிலிருந்து அதிகம் வேறுபட்டதல்ல.



படிப்பகம்

இன்று இவ் விடயம் பற்றிய அறிதல் முன்னைவிட அதிகமாக இருந்தாலும் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரப் போதிய அளவில் இல்லை.

மனித உரிமைகள் பற்றியும் ஜனநாயக உரிமைகள் பற்றியுமான பிரச்சினைகளைத் தமது ஆதிக்கத்திற்குத் தடையாக உள்ள நாடுகளுக்கு எதிராகப் பாவிக்க இயலாத அளவில் ஏகாதிபத்தியத்துக்கு அவை பற்றிய அக்கறை இல்லை. ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்தளவில் தமது விடுதலைக்கு அவர்கள் தங்களையே நம்பி இருக்க வேண்டியவர்களாவர். முக்கியமாக, இக் காரணத்தினாலேயே , வர்க்கம், இனம், தேசிய விடுதலை, பெண்ணுரிமை, சுற்றாடல் போன்றன தொடர்பான போராட்டங்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கும் கொள்ளைக்கும் ஆளாவோர் இடையே மிகவும் பரந்துபட்ட ஒற்றுமை பேணப்பட வேண்டியுள்ளது. தேசங்களாக அடையாளங் காண இயலாத இனப்பிரிவினருக்கும் சுயநிர்ணய உரிமைக் கொள்கையை நீட்டித்தல் மேற்குறிப்பிட்ட ஒற்றுமையை இயலுமாக்குவதற்கு அவசியமான ஒரு நடவடிக்கையாகும்.

மிகவும் மையப்படுத்தப்பட்ட அரசதிகாரத்தையும் பெரிய வலிய அரசுகளையும் பரிந்துரைப்போர் அதிகாரப் பரவலாக்கத்தை விரும்ப மாட்டார்கள். உலகப் பொருளாதார ஒருங்கிணைவு பற்றிய அவர்களது கருத்து, விஞ்ஞானம், தொழில் நுட்பம், அபிவிருத்தி போன்றன பற்றிய அவர்களது கருத்துக்களைப் போல குறைபாடானதே. எந்த ஒரு மனித சமூகத்தினதும் அடையாளத்தை மறுப்பதன் அடிப்படையிலோ விஞ்ஞான உண்மை பற்றிய குறுகலான பார்வை ஒன்றை ஏற்று பிற வேறு வகையான மனித அறிவை எல்லாம் நிராகரித்தோ மனித இனத்தை ஒன்றுபடுத்த இயலாது. அறிவு பற்றிய இத்தகைய பார்வைகள் யாவும் சில நூற்றாண்டுக் காலத்துக்கு முன்பிருந்த கழிவிரக்க நோக்குடைய மிஷனரிமார்களின் பார்வைகளின் அளவுக்குத் திமிர்த்தனமானவையே. மூன்றாம் உலகின் ஒடுக்கப்பட்ட மக்களது போராட்டத்தை, விரிவான நோக்கில், அதிகாரப் பரவலாக்கம், சுயநிர்ணயம் ஆகியவற்றினின்றும் பிரித்து வைக்க இயலாது. இறுதி ஆராய்வில் இது உலகு தழுவிய ஜனநாயகத்துக்கான போராட்டமுமாகும்.

சுயநிர்ணயக் கோட்பாட்டை விரிவுபடுத்துவதன் நடைமுறைச் சாத்தியமும் பொருத்தப்பாடும் உலக ஒருமைப்பாட்டுக்காரர்களால் மறுக்கப்படுவது மிகவும் சாத்தியமே. ஏனெனில், இவர்களுக்கு, இப்போதைக்கு உலகம் ஏகாதிபத்தியத்தினதும் பன்னாட்டுக் கம்பெனிகளதும் தலைமையின் கீழ் ஒரு மகிழ்வான குடும்பமாகும் வாய்ப்புப் பற்றிய எதிர்பார்ப்பு உள்ளது.

மறுபுறம், அண்மைய வரலாற்றில், மிகச் சிறிய சனத்தொகையைக் கொண்ட இனப்பிரிவினர் தமது அடையாளத்தைப் பேணவும் சில வரையறை-

கட்கு உட்பட்டேனும் தமது அலுவல்கள் மீது ஆளுமை செலுத்தவும் இயலுமான இரு சூழ்நிலைகள் பற்றி இங்கு குறிப்பிடலாம். 60 கோடி மக்களைக் கொண்டிருந்த (இன்று 120 கோடியைத் தாண்டியுள்ள) சீனா, ஐம்பதுக்கும் அதிகமான தேசிய சிறுபான்மை இனங்களை அடையாளங்கண்டு அங்கீகரித்துள்ளது. அதிற் சில தேசிய சிறுபான்மையினரது சனத்தொகை ஒரு இலட்சத்திலும் குறைவானது. சற்றுப் பெரிய பல தேசிய சிறுபான்மையினருக்குச் சுயாட்சிப் பிரதேசங்களும் சிறியனவற்றுக்குத் தனியான சுயாட்சி அலகுகளும் உள்ளன.

அதைவிட வியந்து போற்றற்குரியது மத்திய அமெரிக்காவில் உள்ள சிறிய நாடான நிக்கராஹுவா பற்றியதாகும். நிக்கராஹுவாவின் சர்வாதிகார ஆட்சியைத் தூக்கி எறிந்து அதிகாரத்துக்கு வந்த புரட்சிகர ஸான்டினிஸ்ற்றா அரசாங்கம் 1984 முதல் 1986 வரை அரசியல் யாப்புப் பற்றிப் பொதுமக்களுடன் விரிவான கலந்துரையாடலை நடத்தியது. 1987ம் ஆண்டின் அரசியல் யாப்பு, நிக்கராஹுவாவைப் பல இனத்தவரது நாடாகப் பிரகடனம் செய்தது. அது மட்டுமல்லாமல் அற்லாண்டிக் சமுத்திரக் கரைப் பிரதேசத்தில் எண்ணூறு முதல் ஒரு லட்சத்து இருபதாயிரம் வரையிலான சனத் தொகை கொண்ட ஆறு இனத்தவர்கட்குத் தனித்தனியான சுயாட்சிப் பகுதிகள் நிறுவப்பட்டன. எந்த ஒரு இனமும் இன்னொரு இனத்தின் மீது மேலாதிக்கம் செய்யாதவாறு சுயாட்சிச் சட்டம் உறுதியளித்தது. இவ்வாறு முழு அமெரிக்கக் கண்டத்தினது வரலாற்றிலும் தன்னைப் பல இனத்தவரது நாடாகப் பிரகடனம் செய்த முதலாவது நாடென்னும் பெருமை நிக்கராஹுவாவுக்குக் கிட்டியது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் குறுக்கிட்டு நிக்கராஹுவாவின் அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் குலைத்து 1991ல் ஸன்டினிஸ்ற்றா ஆட்சியைத் தூக்கி எறிந்திராவிட்டால், நிக்கராஹுவாவின் முன்னுதாரணமான நடவடிக்கை முழு லத்தீன் அமெரிக்காவினதும் சிறுபான்மை இனப் பிரிவினருக்கும் ஒரு பெரும் தெம்பாகவும் இலங்கை உட்பட்ட பல ஆசிய நாடுகட்கும் ஒரு அரிய பாடமாகவும் அமைந்திருக்கும்.

முன் குறிப்பிட்ட இரு உதாரணங்களும், எவ்வாறு சுயநிர்ணயக் கோட்பாடு தேசங்களாக அமைய இயலாத இனப் பிரிவினர்கட்கும் விரிவுபடுத்தப்படக் கூடுமென்று சுட்டிக் காட்டுகின்றன. அக் கோட்பாட்டை எப்படிப் பிரயோகிக்கலாம் என்பதற்கான வழிமுறைகளாக அல்லாமல், அவை அக்கோட்பாட்டின் விரிவாக்கத்தின் சாத்தியப்பாட்டை நன்கு சித்திரிக்கின்றன.

www.padippakam.com

அங்கு சுயநிர்ணயம் என்ற சொற் தொடர் பாவிக்கப்படாவிட்டாலும், சுயாட்சிக் கொள்கையானது; பிரிந்து போக முடியாத இனப்பிரிவுகள் சுய நிர்ணயத்திற்கு எவ்வளவு தூரம் நெருக்கமாக வரமுடியும் என்பதற்குச் சான்றாக உள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில் முக்கியமானது எதுவென்றால், ஒரு இனப்பிரிவின் சுயாட்சி உரிமையும் அதிகாரப் பரவலாக்கமும் பெரியளவிலான ஜனநாயகமாக்கலுக்கு வழி கோலுகின்றன என்பதாகும். இதன் மூலம் ஒரு இனப்பிரிவு ஒரு தனித்துவமான சமூகப்பிரிவாகத் தொடர்வது பற்றிய முடிவுகளை எடுப்பதற்கு முழுமையான அதிகாரமுடையதாகிறது.

சுயநிர்ணயம் என்பது சர்வதேச நிலவரங்களினின்றும் தனிமையிற் செயற்படும் ஒன்றல்ல. சில தேசிய இனங்கள் தொடர்பாக உள்நாட்டுப் போரையும் பிரிவினையையும் ஊக்குவிக்கும் ஏகாதிபத்தியம் தனது கொல்லைப்புறத்திலும் தனது ஆதிக்கத்திற்கு முற்றாகக் கீழ்ப்பட்டவர்கள் ஆளும் நாடுகளிலும் தேசிய இன ஒடுக்கல் பற்றிக் கண்டு கொள்வதில்லை. எனவே தான், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தினின்று தேசியப் பிரச்சினையைப் பிரித்து நோக்க இயலாது.

மூன்றாம் உலகம் தனது நிலைமைகள் சார்ந்தும் தனது வெகுசனங்களது நலன்கள் சார்ந்தும் விருத்தி, சனநாயகம் என்பனவற்றை மீள வரையறுக்க வேண்டியுள்ளது. மூன்றாமுலக மக்களிடையே அதிகளவிலான ஒற்றுமைக்கும் நெருக்கமான ஒத்துழைப்புக்குமான தேவை பெரிது. தேசிய இன ஒடுக்கலின் நடுவே இத்தகைய ஒற்றுமை இயலுமானதல்ல. மறுபுறம், சுயநிர்ணயத்தின் பயன்பாட்டைச் சகல இனப்பரிவினருக்கும் விரிவுபடுத்துவது, சனநாயகத்துக்கு வலுவூட்டி, அதிகாரப் பரவலாக்கத்தை இயலுமாக்கி, அரசியல்- பொருளாதார விடுதலைக்கான மூன்றாமுலகப் போராட்டத்தைப் பலப்படுத்தும்.

(ஆங்கில மூலம்: **Tamil Times 1996**)



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ISBN 955-8568-00-7

படிப்பகம்